

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 286

செவ்வாய்க்கிழமை
09 செப்ரெம்பர் 2025

ஆவணி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## சர்வதேச விசாரணைக்கு ஒருபோதும் இடமில்லை!

### உள்நாட்டுப் பொறிமுறை போதும் அமைச்சர் விஜித ஹேரத் உறுதி

ஜெனிவா, செப். 9
இலங்கை தொடர்பான விவகாரங்களில், சர்வதேசத் தலையீடு என்ற பேச்சுக்கே இடமில்லை. உள்நாட்டுப் பொறிமுறை மூலம் அனைத்துப் பிரச்சினைகளையும் தற்போதைய அரசாங்கம் தீர்க்கும் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

11

# சர்வதேசப் பொறிமுறைக்கு இணங்கவேண்டும் ஸ்ரீலங்கா

### மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் ட்ரக் வலியுறுத்து



ஜெனிவா, செப்ரெம்பர் 9
இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேசப் பொறிமுறை ஊடாகப் பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் இணக்கம் தெரிவிக்கவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக் வலியுறுத்தியுள்ளார்.

11

## புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம்; விரைவில் வர்த்தமானி வெளிவரும்

### ஐ.நா.வில் அறிவித்தது இலங்கை

ஜெனிவா, செப். 9
பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவுள்ள நிலையில், அதற்குப் பதிலாக புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் உருவாக்கப்படும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில்

11

## செம்மணிப் புதைகுழிக்கும் சர்வதேச விசாரணை தேவை

### வோல்கர் ட்ரக் வலியுறுத்து

ஜெனிவா, செப். 9
அரியாலை - செம்மணிப் புதைகுழி விடயத்தில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் வலியுறுத்தியுள்ளார்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 60ஆவது அமர்வு நேற்று

11

## யாழில் இந்த வருடம் 937 பேருக்கு டெங்கு!

### பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 9
யாழ்ப்பாணம் மாவட்டத்தில், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 937 பேருக்கு டெங்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம்

11

## உடைமையில் போதை; பவுசர் சாரதி கைது!

யாழ்ப்பாணம், செப். 9
எரிபொருள் தாங்கியின் சாரதியொருவர் கஞ்சா, ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று வீதிச்சோதனையில் ஈடுபட்ட போது,

11



## சடலத்தை அடையாளம் காணுமாறு கோரிக்கை

மன்னார், செப். 9
மன்னார் - தலைமன்னார் காட்டுப் பகுதியில், அண்மையில் எரிந்த நிலையில் மீட்கப்பட்ட

11

### இடமாற்றம் வழங்குமாறு கோரி

## வடக்கு மாகாணத்தில் பணிபுரியும் சிங்கள ஆசிரியர்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், செப். 9
வெளிமாவட்ட கட்டாயப் பணிக்காலத்தைத் தாண்டிப் பணியாற்றுகின்ற போதிலும், தமக்கு இன்னமும் சொந்த மாவட்டங்களில் நியமனங்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து சிங்கள மொழி ஆசிரியர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
வடமாகாண ஆளுநரின் அலுவலகத்துக்கு

11

## கூரை திருத்த ஏறியவர் தவறி வீழ்ந்து உயிரிழப்பு

### நவாலியில் சோகம்

யாழ்ப்பாணம், செப். 9
வீட்டின் கூரையைத் திருத்துவதற்கு ஏறிய நபர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தத் துயரச் சம்பவம் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலி வடக்

11

### முச்சந்தி முரளி

'உவைக்கு சர்வதேசக்கடன் எண்டா இனிக்கும், சர்வதேசப் பொறிமுறை எண்டால் கசக்கும் கண்டியளோ'

## தவறான முடிவெடுத்து மூதாட்டி உயிரிழப்பு!

விரிவு பக்கம்:- 11

## யாழில் கடும்காற்று; 12 பேருக்குப் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 9
யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இரவு வீசிய பலத்த காற்றுக் காரணமாக, 12 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்தாவது:-
யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கடும் காற்றுடனான காலநிலை நிலவியது. இதன்போது, வேலணை பிரதேச செயலர் பிரிவில்

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிக |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 08.09.2025 | 4188 | P | 22 28 52 76 | விசேட எழுத்து P |
| ஹந்தஹன ராசி சுப பலன் | 08.09.2025 | 1255 | | 08 29 42 41 | வெற்றி இலக்கினம் விருச்சிகம் |
| NLB ஜய | 08.09.2025 | 0214 | D | 7 0 0 0 | |
| மெகா பவர் | 08.09.2025 | 2294 | Q | 10 25 57 66 | சுப்பர் இலக்கம் 19 |
| மஹஜன சம்பத | 08.09.2025 | 5946 | C | 4 5 2 8 2 0 | |
| தன நிதானய | 08.09.2025 | 1976 | G | 39 41 57 59 | விசேட எழுத்து G |
| அத சம்பத | 08.09.2025 | 0521 | C | 2 8 2 0 | |
| சுப தவசக் | 08.09.2025 | 0062 | | 29 44 45 52 | வெற்றி இலக்கினம் மேஷம் |

| லொத்தர் | திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு / வெற்றி வாரம் | மேலதிக |
|---|---|---|---|---|---|---|
| சுபிரி தன சம்பத | 08.09.2025 | திங்கட்கிழமை | G | 0 0 4 6 4 9 | 0654 | |
| Super Ball | 08.09.2025 | திங்கட்கிழமை | K | 10 34 35 78 | 2920 | |
| சனிதா | 08.09.2025 | திங்கட்கிழமை | J | 15 26 28 61 | 5081 | |
| லக்ன ராசி | 08.09.2025 | திங்கட்கிழமை | | 17 28 36 59 | 4632 | மீனம் |
| KAPRUKA | 08.09.2025 | திங்கட்கிழமை | C | 22 43 50 56 | 2096 | சுப்பர் இலக்கம் 37 |
| அத கோடிபதி | 08.09.2025 | திங்கட்கிழமை | T | 28 56 62 69 | 2746 | |
| JAYODA | 08.09.2025 | திங்கட்கிழமை | I | 13 16 57 68 | 2159 | |

# ஒருங்கிணைந்த அரசியலே தமிழினத்தைப் பாதுகாக்கும்

### அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், செப்.9**
**ஒருங்கிணைந்த அரசியலே தமிழ் இனத்தைப் பாதுகாக்கும் என்று அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்கு அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நீண்டகாலத்துக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருங்கிணைந்து செம்மணிக்கான கையெழுத்துப் போராட்டத்தை அறிவித்துள்ளன. தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் ஏற்கனவே புரிந்துணர்வு அடிப்படையில் ஒருங்கிணைந்து உள்ளன. தற்போது தமிழரசுக்கட்சி ஒருங்கிணைவுக்கு வந்தமை முக்கியமானது. இந்த ஒருங்கிணைவு தேர்தல்களிலும் தொடர வேண்டும்.
வரலாற்று ரீதியாக ஒருங்கிணைவு அரசியலின் தேவையை முதன்முதலில் புரிந்துகொண்டவர் தந்தை செல்வா . ஒருங்கிணைவு அரசியல் இல்லாமல் முன்னேறிச் செல்லமுடியாது என்பதைத்தந்தை செல்வா அனுபவரீதியாகப் புரிந்துகொண்டார். தற்போது சிவில் அமைப்புகள் கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை முழுமையாக கைவிட்டுள்ளன. கட்சிகளின் இருப்புக்குப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதால் தாமாகவே ஒருங்கிணைவு அரசியலுக்கு அவை முன்வந்துள்ளன. எனவே கடந்த தேர்தலின் படிப்பினை தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு நல்ல பாடமாக இருக்கவேண்டும் - என்றுள்ளது. (எ-இ)

# மத்திய நெடுஞ்சாலை திட்டம் மீள ஆரம்பம்

கொழும்பு, செப்.9
மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் கடவத்தை மீரிகமப் பகுதியின் முதற் பிரிவை நிர்மாணிப்பதற்கான சீன நிதியுதவி மீண்டும் கிடைத்துள்ளதை அடுத்து இந்தத் திட்டம், இந்த மாதத்தில் அல்லது அடுத்த மாதத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
இதுதொடர்பில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ, 37 கிலோமீற்றர் நீளமான இந்த வீதிப் பிரிவை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதியுதவியை சீனாவிடம் இருந்து இலங்கை பெற்றுக்கொள்ளமுடிந்துள்ளது என்று தெரிவித்திருந்தார். மீதமுள்ள கட்டுமானப் பணிகளின் அளவை அடிப்படையாகக் கொண்டு, கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கியவுடன் இரண்டரை ஆண்டுகளுக்குள் திட்டம் நிறைவடையும் என்று அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர். (எ-இ)

# தேசபந்து வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,செப்.9
தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமித்ததற்கு எதிரான மனு மீதான விசாரணையை ஒத்திவைத்து உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.
தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதற்கான தீர்மானம் அரசியலமைப்புக்கு முரணானது எனத் தீர்ப்பளிக்கக் கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த மனுமீதான விசாரணையை 2026ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதிக்கு உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது. (ச-இ)

# ஊழல் மோசடிகளை மறைக்கவே 33 அரச நிறுவனங்களுக்குப் பூட்டு

### துமிந்த நாகமுவ குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.9
கடந்த கால ஊழல் மோசடிகளை மறைப்பதற்காக நட்டம் என்ற போர்வையில் 33 அரச நிறுவனங்களை மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதனால்தான் அந்த நிறுவனங்களின் பெயர்களை அரசாங்கம் வெளியிடவில்லை என்று மக்கள் போராட்ட அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
33 அரச நிறுவனங்களை மூடத் தீர்மானித்துள்ளோம் என்று அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, கடந்த அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்திருந்தார்.
ஆனால் இந்த 33 அரச நிறுவனங்களின் பெயர்களை அரசாங்கம் இதுவரை மக்களுக்கு வெளிப்படுத்தவில்லை.
நட்டமடைந்துவரும் நிறுவனங்கள் எனத் தெரிவித்து அரசாங்கம் மூடிவிடுவதற்குத்தீர்மானித்துள்ள நிறுவனங்கள்மீது, ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகள் உள்ளன. ஊழல்மோசடிக்குற்றச்சாட்டுகளை மறைப்பதற்கு இந்த அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை வழங்கப்படவில்லை - என்றார். (எ-இ)

# மின்னல் எச்சரிக்கை

கொழும்பு,செப்.9
நாட்டின் பல பகுதிகளுக்கு கடுமையான மின்னல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும்.
மின்னலால் ஏற்படும் சேதங்களைக் குறைக்கப் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தொலைபேசிகள் மற்றும் மின்சார சாதனங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# அதிக வெப்பத்தால் காட்டுத்தீ பரவல்

கொழும்பு, செப்.9
நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக பல பகுதிகளில் காட்டுத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
பொலன்னறுவை, திம்புலாகல கந்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஏற்பட்ட காட்டுத் தீப்பரவல் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.
உடவலவப் பகுதியில் உள்ள வனப்பகுயில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட திடீர் தீப்பரவலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.
அதேவேளை, மாத்தளை, உக்குவெலவில் உள்ள ஒரு வனப்பகுதியிலும், இரத்தினபுரி, கொன்கஸ்தென்னவில் உள்ள ஒரு வனப்பகுதியிலும் தீப்பரவல் பதிவாகியுள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதுசெய்யப்பட்ட கே.பி.யுடன் தனித்து உரையாடிய கோத்தா!






## பொன்சேகா வெளியிடும் தகவல்கள்

**கொழும்பு, செப்.9**

**மலேசியாப் பொலிஸாரே கேபியைக் கைதுசெய்தனர். இலங்கைக்கு கொண்டுவரப்படும்வரை அவர் கேபி என்பது எமக்குத் தெரியாது என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

கோத்தாபய ராஜபக்ச கேபியை வீட்டுக்கு வரவழைத்தே உரையாடினார். அவர் வசம் இருந்த புலிகளின் பணம், கப்பல்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு ராஜபக்சக்களும் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் பொன்சேகா தெரிவித்துள் ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், கேபியை மலேசியப் பொலிஸாரே கைதுசெய்தனர். அது பற்றி நாம் அறிந்திருக்கவில்லை. இலங்கையால் தேடப்படும் நபரொருவர் எம்மிடம் உள்ளார். குழுவொன்றை அனுப்பினால் ஒப்படைக்கலாம் என மலேசியாவில் இருந்து எமக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இதற்கமைய நால்வரடங்கிய சி.ஐ.டி. குழு அங்கு சென்றது. அந்தக் குழுவுடன் மலேசியாவில் இருந்தும் குழுவொன்றும் வந்தது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய பின்னரே, கைதுசெய்யப்பட்டவர் கேபி என்ற தகவலை அவர்கள் வெளியிட்டனர்.

கோத்தாபய ராஜபக்ச என்ன செய்தார்? 24 மணிநேரத்துக்குள் கேபியை வீட்டுக்கு அழைத்தார். தனியாகப் பேச்சு நடத்தினார். அப்போது கேபிவசம்தான் புலிகளின் நிதி, கப்பல்கள் இருந்தன. ஒரு மாதத்துக்குப் பின்னர் கேபி விடுவிக்கப்பட்டார். அப்போது நான் இராணுவத்தில் இருக்கவில்லை.

கேபி வசம் இருந்த பணத்துக்கு என்ன நடந்தது? அவை அரசுடமையாக்கப்படவில்லை. கேபியுடன் இவர்கள்தான் (ராஜபக்சக்கள்) கலந்துரையாடினார்கள். என்ன நடந்தது என்பது அவர்களுக்குதான் தெரியும். எனவே, இதற்கு பொறுப்புக்கூறவேண்டும் - என்றார். (எ-44)

# ஊழல் அரசியலுக்கு இனியும் இடமில்லை

## அமைச்சர் சமந்த தெரிவிப்பு

கொழும்பு,செப்.9

நாட்டுக்குள் இனி புதிய பாதாள உலகம் உருவாக வாய்ப்புகள் இல்லை. ஏனெனில் அந்த ஊழல் அரசியல் முடிந்துவிட்டது என்று அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

ஹற்றன் நகரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த காலத்தில் பாதாள உலகம் தனியாக இயங்கவில்லை. அதன் பின்னால் அரசியல் பேணப்பட்டது. பாதாள உலகம் இலங்கைக்குள் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் செயற்பட்டது. இனி பாதாள உலகுக்கு மன்னிப்பு இல்லை. அதைச் சுத்திகரிக்கவேண்டும். அதை ஆரம்பிக்க முயற்சிக்கும்போது, பிரச்சினைகள் வெளிவர ஆரம்பித்துள்ளன-என்றார். (எ-இ)

# 83 கடவுச்சீட்டுகளுடன் இருவர் கைது




கொழும்பு, செப்.9

கணேமுல்ல பொலிஸ் பிரிவின் ஹொரகொல்லப் பகுதியில் பல்வேறு நபர்களுக்குச் சொந்தமான 83 கடவுச்சீட்டுகளை சட்டவிரோதமாக வைத்திருந்த ஆண் ஒருவரையும் பெண் ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கணேமுல்ல பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு நடத்திய சோதனையைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். ஆண் சந்தேகநபர் வத்தளையைச் சேர்ந்த 51வயதுடையவர் என்றும், பெண் சந்தேகநபர் கணேமுல்லயைச் சேர்ந்த 62 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கணேமுல்ல பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (எ-இ)



# சர்வதிகார ஆட்சிநோக்கி தேசிய மக்கள் சக்தி அரசு

## முன்னாள் எம்.பி. தொலவத்த தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.9

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதிகார ஒரு கட்சி ஆட்சிமுறைமையை நோக்கியே நகர்கின்றது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீதான அடக்குமுறைகளும் தற்போது ஆரம்பித்துள்ளன என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள்மீதான அடக்குமுறைகளும் ஆரம்பித்துள்ளன. பிவிதுரு ஹெல உறுமயத் தலைவர் உதய கம்மன்பிலவைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மறுபுறம் வியத்புரத் திட்டத்தின் கீழ் வீடுகளைக் கொள்வனவு செய்தவர்களுக்கான சலுகைகள் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். 210 இலட்சம் பெறுமதியான வீட்டுக்கு இறுதியில் 310 இலட்சம் செலுத்துகின்றோம். இதில் எமக்கு எவ்வித சலுகைகளும் வழங்கப்படவில்லை. அரசாங்கத்தின் தவறுகளையும் குறைபாடுகளையும் மறைப்பதற்காக இவ்வாறு மக்களின் கவனத்தை எதிர்க்கட்சியினர் மீது திருப்புகின்றனர் - என்றார். (எ-இ)

மூலதனம் இல்லாமல் ஆரும் தொழில் துடங்கி முன்னேற வேணும் எண்டு நினைக்கிறியளோ. அப்பிடி நினைச்சால் செய்ய வேண்டிய முதல்வேலை, கோயில் காவடியளுக்குப் பின்னால போறதுதான். காவடிக்குப் பின்னாலதிரியிறதுக்கும் முன்னேறுறதுக்கும் என்ன சம்பந்தம் எண்டு நினைப்பியள். சம்பந்தம் இருக்கு.

பறவைக்காவடி எண்டாலென்ன, பாற்காவடி எண்டாலென்ன காவடி எடுக்கிறவை சந்திக்குச் சந்தி நிண்டு ஆடேக்கையும், வழியில வாற கோயில்களைக் கடக்கேக்கையும் சிதறுதேங்காய் அடிக்கிறதைக் கண்டிருப்பியள். அப்பிடிக் காவடியளுக்கு அடிக்கிற சிதறுதேங்காயள் அங்கேயே கிடந்து, றோட்டால போய்வாற வாகனங்களில நசிபட்டு, சப்பளிஞ்சு ஒண்டுக்கும் உதவாமல் றோட்டோடையே கலந்திடும். அதோட தேங்காய் சிரட்டையளால றோட்டால போறவாற வைக்கும் கரைச்சல். அப்பிடி காவடியளுக்கு அடிக்கிற தேங்காயை ஆரும் ஒரு உரப்பையில பொறுக்கி, காயவைச்சால் எப்பிடியும் நாப்பது அம்பது போத்தல் தேங்காய் எண்ணெய் வடிக்கலாம். அதிலையும் நல்லூர், சந்நிதி எண்டால் காவடியளைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அப்பிடி பேமஸான கோயில்களிலை இப்பிடிக் காவடியளுக்குப் பின்னால போனால் நூறு போத்திலுக்கும் மேல எண்ணெய் வடிக்கக்கூடியளவுக்கு தேங்காய் எடுக்கலாம்.

சிலவேளையளில காவடிக்கு அடிச்ச தேங்காயை எடுத்தால் கடவுள் கோபிப்பார் எண்டும் சிலர் நம்பலாம். அப்பிடி நம்பிறவை அந்தத் தேங்காயளை அங்கேயே விடாமல் அதுகளை அடிச்ச உடனேயே பொறுக்கி எடுத்து ஒரு பையில போட்டு, அதை கோயில் காரரிட்ட குடுத்தால், அவை அதை எண்ணெயாக்கி கோயில் தேவைக்குப் பாவிப்பினமெல்லோ. காவடி எடுத்த புண்ணியத்தோட இப்பிடி கோயிலுக்கு எண்ணெய் குடுத்த புண்ணியமும் 'எக்ஸ்ட்ராவா' கிடைக்கும். அதோட கோயில்காரருக்கும் எண்ணெய்க் காசு மிச்சம். கோயில்காரர் இப்பிடிக் காவடிக்கு அடிக்கிற தேங்காயை பொறுப்பேற்க தனியா ஒரு இடத்தை வைச்சிருந்தால், வாற சனமும் அதுக்குள்ள கொண்டந்து இந்தக் காவடித் தேங்காயைப் போடுவினம். கனபேருக்கு காவடிக்கு அடிச்ச தேங்காயை எடுக்க வெக்கமாயிருக்கலாம். ஆனால் வீணாப்போற வளத்தை காசாக்கிறதில என்ன பிழை இருக்கு?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில்எதிர்பாராத ஆதாயம்ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பிற்பகலுக்குமேல்மற்றவர்களிடம்பேசும்போதுபொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவுகிடைக்கும்.

**கடகம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். நண்பர்களின் மூலம் எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சிதரும். இலாபம் கூடுதலாக இருப்பது மகிழ்ச்சிதரும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம்தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். உறவுகளிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், செலவுகளும் ஏற்படக் கூடும். சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**விருச்சிகம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். கடன் வாங்கவும்நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடவேண்டி இருக்கும். உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். வாழ்க்கைத்துணை நீண்டநாள்களாக கேட்டுக்கொண்டிருந்ததை வாங்கிக் கொடுப்பீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**கும்பம்:** புதியமுயற்சிகளைப்பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் மேலோங்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் தொடர்புகொண்டு பேசுவது மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவதாக இருக்கும்.

### கடல் நீர் உட்புகுவதால்

# உவர் நிலமாகும் வயல் நிலங்கள்!



### நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர் குஞ்சுக்குளம் விவசாயிகள்

**கிளிநொச்சி, செப்.9**

**கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் பகுதியில் உள்ள வயல் நிலங்கள் உவர்நிலமாக மாறுவதால் விவசாயத்தைக் கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

மண்டைக்கல்லாறு உவர்நீர்த் தடுப்பணை இல்லாததால், கடல் நீர் வயல் நிலங்களுக்குள் உட்புகுகின்றது. வயல் நிலங்கள் உவர் நிலமாக மாறுவதால் விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளனர். இப்போது வயல்நிலங்களில் உப்பு விளைந்து காணப்படுகின்றது.

அந்தப் பகுதியில் நெற்செய்கையில் ஈடுபட்டுவந்த விவசாயிகள் இந்தநிலைமையால் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாத நிலையில், வாழ்வாதாரத் தேவைகளுக்காக இப்போது உப்பு அறுவடையில் ஈடுபடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. உரிய அதிகாரிகள் உவர்நீர்த் தடுப்பணை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)

# சிறையால் வந்தவரால் வன்முறைத் தாக்குதல்!

### ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,செப்.9

சிறையில் இருந்து வெளியேவந்த ஒருவர் சகோதரனுடன் இணைந்து மீண்டும் வன்முறையில் ஈடுபட்ட நிலையில் அவர்கள் இருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதலிகோவில் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. வாளுடன் கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டிருந்த குறித்த நபர் நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். அவர் மீண்டும் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார். நீண்டகாலமாக இருந்துவந்த காணித் தகராறு காரணமாகவே இந்தத் தாக்குதல் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த நபர் வட்டுக்கோட்டைப் பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ச-27)

# தென்மராட்சிப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம்,செப்.9

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பண்பாட்டுவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு சாவகச்சேரி சிவன்கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலாசார கலைமன்ற மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் மற்றும் கலாசார குழுக்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். இந்த வருட மூத்த கலைஞர்களுக்கான 'கலை சாகரம்' விருது ந. விமல்ராஜ், வே. டேவிட், சி.அழகேசன், திருமதி யோகேஸ்வரி ஜெகதீஸ்வரன் ஆகியோருக்கும், 'இளங்கலைஞர்' விருது வ. மதன்பாபு, நா. கேசரன் பானுஜா ஆகியோருக்கும்வழங்கப்படவுள்ளன.

பிரதேச செயலர் பி.ச.சத்தியஜோதி தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச்செயலர் ம. பிரதீபனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி ஆதார மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் காண்டீபனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-9,159)

# விபத்தில் முதியவர் காயம்

யாழ்ப்பாணம்,செப்.9

மோட்டார் சைக்கிள் - டிப்பர் விபத்தில் முதியவர் ஒருவர் உரஞ்சல் காயங்களுடன் தெய்வாதீனமாகத் தப்பியுள்ளார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு முன்பாக அண்மையில் நடந்துள்ளது.

டிப்பர் வாகனம் மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல முற்பட்ட வேளை மோட்டார் சைக்கிளில் மோதியுள்ளது. இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்த அந்த முதியவர் நிலைகுலைந்து வீதியில் வீழ்ந்த நிலையில் கை மற்றும் தோள்ப் பகுதியில் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். (ச-131)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.9

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப்படனத் தொடரின் 38ஆவது சொற்பொழிவு எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள் ஆசியுரையையும், பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையும், இளஞ்சைவப்புலவர், பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் "உருத்திரர்கேள்விப் படலம்" என்னும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவையும் வழங்கவுள்ளனர். (எ-41)

★★★★

யாழ்ப்பாணம், செப்.9

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாகதெல்லிப்பழைமாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்தத்திருவிளையாடற்புராணச் சிறப்புச்சொற்பொழிவுத்தொடர் எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் பிரசங்க பூஷணம் க. கைலநாதனின் "பழியஞ்சின படலம்" எனும் தலைப்பில் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. (எ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

சின்னச் சின்ன நல்ல விடயங்களைச் சேர்த்துக்கொண்டே முன்னேறுங்கள், அதுவே இறுதியில் நம்மை முழுமையானதாக மாற்றுகின்றது.

ஜிம் ரோஹன்

# இம்முறையேனும் விழிப்பாயிருப்போம்...!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 900 பேருக்கு மேற்பட்டவர்கள் டெங்குத் தொற்றுக்கு ஆட்பட்டுள்ளனர் என்று தெரிவித்திருக்கின்றார் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இம்முறை டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சற்றுக் குறைவாக உள்ளது போல் தெரிந்தாலும், எதிர்வரும் மாரிகாலமும் வழக்கமான மழைக்காலங்களைப்போல ஆபத்தானது என்ற செய்தியைத்தான் மருத்துவர் கேதீஸ்வரன் வெளிப்படுத்திய தரவுகள் வலுவாகக் கட்டியம் செய்கின்றன.

வெம்மையின் பூமியான வடக்கு மாகாணத்தில் மழைக்காலம் மட்டும்தான் பெரும் வரமாக அமைகின்றது. மாரிமழை மூலம் கிடைக்கும் தண்ணீர் மூலமே பெரும்போக நெற்செய்கை இடம்பெறுகின்றது. அத்துடன், மாரிமழை மூலம் கிடைக்கும் தண்ணீர் மூலமே எஞ்சிய மாதங்களில் வடக்கு, கிழக்கு பகுதிகள் உயிர்பிழைக்கவும் முடிகின்றது. இவ்வாறாக வரமாக வாய்த்த மழைகாலம் கடந்த சில வருடங்களாக டெங்கு முதலிய நோய்களால் ஆபத்தானதாக மாறியிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் நிலவும் சன நெரிசல், சுகாதாரமற்ற பொதுச்சூழல், மாறிப்போன உணவு முறைகள், பெருகி வரும் நோய்கள், அனைவரின் உடலிலும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து வரும் நிலை, மக்கள் நெருக்கத்தால் மாசுபடும் சுற்றுச்சூழல், தேங்கிநிற்கும் தண்ணீர் போன்றவற்றால் மழைக்காலம் என்றாலே ஒருவித எரிச்சல் தோன்றிவிடுகிறது. மழை என்றாலே அச்சமும் பதற்றமும் சூழும் அளவுக்கு எங்களின் வாழ்க்கை மாறிப்போய்விட்டது.

ஒவ்வொரு பருவகாலத்தின் போதும், டெங்குத் தொற்றுத் தொடர்பில் ஏராளம் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டாலும் எந்தப் பயனும் இல்லை. வரவேண்டிய மாற்றங்கள் சாத்தியப்பட்டதாயில்லை. அரச அதிகாரிகளும் 'வருமுன் காப்போம்' என்ற ரீதியில் செயற்பட்டதாக இல்லை. யாழ்ப்பாணம் பொம்மைவெளி, நாவாந்துறை, கொட்டடிப் பகுதிகளில் கடந்த வருடம் ஏராளமான டெங்குத் தொற்றாளர்கள் அவதானிக்கப்பட்டனர். இதற்கு, மழைநீர் தேங்கும் சூழலும், பலநூறு கவனிக்கப்படாத பகுதிகளும் அங்குள்ளமையே காரணம் எனக் கூறப்பட்டது. இந்த வருடமும் அந்தப் பகுதிகள் கிட்டத்தட்ட அதே நிலையிலேயே காணப்படுகின்றன. எந்த மேம்பாட்டுத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை.

செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதிமுதல் 24ஆம் திகதிவரை டெங்கு தொடர்பான களத்தரிசிப்பில் ஈடுபடவுள்ளதாக சுகாதாரத் திணைக்களத்தால் இம்முறை அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வழக்கமாக செப்ரெம்பரின் ஆரம்ப நாள்களில் விடுக்கப்படும் சம்பிரதாயபூர்வ அறிவிப்பாகவே இது அமைந்திருக்கின்றது. இந்த மூன்று நாள் செயற்றிட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய நிலையிலா யாழ்ப்பாணம் மாவட்டத்தின் டெங்குநிலை காணப்படுகின்றது என்ற சுயபரிசீலனை மிகவும் அவசியம். கடந்த வருடம் ஆபத்தான பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகள் மீது இவ்வருட கோடையில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டிருக்க வேண்டும். நீண்ட கண்காணிப்புகள் - பொறிமுறைகள் ஊடாக ஆபத்தை முற்றாக அகற்றியிருக்கவேண்டும். நீண்டகாலமாக நாங்கள் திரும்பத் திரும்ப தோல்வியும் புள்ளியும் அதுதான்.





# நடப்பாண்டில் குவிந்தது 5.116 பில்லியன் டொலர்!

**கொழும்பு, செப்.9**
**இந்த வருடத்தின் ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையான காலப்பகுதியில் வெளிநாட்டுத் தொழிலாளர் பணவனுப்பல் மூலம் 5.116 பில்லியனுக்கும் அதிக டொலர் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இலங்கை மத்தியவங்கி வெளியிட்டுள்ள அண்மைய புள்ளி விவரங்களின்படி இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
கடந்த ஓகஸ்ட் மாதத்தில் வெளிநாட்டுத்தொழிலாளர் பணவனுப்பல்கள்மூலம் இலங்கைக்கு 680.8 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைத்துள்ளது. இதே வேளை இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் சுற்றுலா வருவாய் 2 பில்லியன் அமெரிக்க டொலரைக் கடந்துள்ளது. இது கடந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட 1.88 பில்லியன் அமெரிக்க டொலர் சுற்றுலா வருவாயுடன் ஒப்பிடுகையில் 7.8 சதவீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பல் மருத்துவர் ஆட்சேர்ப்பு

கொழும்பு,செப்.9
பல் மருத்துவப் பட்டதாரிகள் 86 பேர் பயிற்சிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர் என்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.
இந்த நியமனக் கடிதங்கள் கொழும்பில் உள்ள ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நேற்று வழங்கப்பட்டுள்ளன. (ச-இ)



## காற்றின் தரம் அறிய வலைத்தளம்

கொழும்பு,செப்.9
காற்றின் தரத்தை அடையாளம் காண தேசிய வலைத்தளம் ஒன்றை அறிமுகப்படுத்த மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.
ஒவ்வொரு குடிமகனும் காற்றின் தரம் தொடர்பாக அறிந்துகொள்ளும் உரிமையை உறுதிசெய்வதற்காக இந்த இணையத்தளம் அறிமுகப்படுத்தப்படும் எனச் சுற்றாடல் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## ஒழுங்குமுறை மீறல் நீதிபதி நீக்கம்

நீதித்துறை சேவை ஆணைக்குழுவால் மாத்தறை மேலதிக மாவட்ட நீதிபதி பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.
நீதித்துறை சேவை ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட ஒழுங்குமுறை விசாரணையில் அவர் குற்றவாளி எனக் கண்டறியப்பட்டதையடுத்து அவர் பணி நீக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## அழைப்புகள் அவதானம்!

### பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,செப்.9
பணம் வழங்குவதாகக்கூறி கையடக்கத் தொலைபேசிகளுக்கு வரும் குறுஞ்செய்திகள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று இலங்கைக் கணினி அவசரகாலப் பதிலளிப்புப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.
இவ்வாறான மோசடி நடவடிக்கைகள் பரிசுகளை வென்றுள்ளதாகவும் பல்வேறு தள்ளுபடிகள், வீட்டிலிருந்து வேலை செய்யும் வாய்ப்புகள் அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் போன்றவற்றை வழங்குவதாகக் கூறி தொலைபேசிகளுக்குக் குறுஞ்செய்திகள் மூலமாகவோ அல்லது அழைப்புகள் மூலமாகவோ மேற்கொள்ளப்படுகின்றன. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றாநோய்களைக் கட்டுப்படுத்த மருத்துவப்பரிசோதனை அவசியம்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் அறிவுரை

யாழ்ப்பாணம்,செப்.9

**ஆண்டுக்கு 2 தடவைகள் 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் மருத்துவப் பரிசோதனை செய்வது அவசியம். இதன்மூலம் தொற்றாநோயைக் கண்டறிந்து கட்டுப்படுத்தமுடியும் எனப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யாழ். மாவட்டத்தில் தொற்றா நோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பான மாவட்டச் செயலணியை உருவாக்குவது தொடர்பான கூட்டம் யாழ்ப்பாண மேலதிக மாவட்டச் செயலர் கே. சிவகரன் தலைமையில் மாவட்டச்செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொற்றாநோய்களான நீரழிவு, உயர்குருதி அழுத்தம், கொலஸ்ரோல், புற்றுநோய் போன்றவற்றால் இலங்கையில் 83 வீதம் இறப்பு ஏற்படுகின்றது.

ஆரோக்கியமான சுகாதாரமுறையிலான உணவின் அவசியம், உடற்பயிற்சி, பாடசாலைகளில் ஆரோக்கியமான சிற்றுண்டிச்சாலை, விபத்துகளைத் தடுத்தல் போன்றவை தொடர்பில் விழிப்புணர்வுடன் இருப்பது அவசியம்.

பாடசாலைகளிலும், அலுவலகங்களிலும் ஆரோக்கியமான மேம்பாட்டு அறை இருத்தல் வேண்டும். 35 வயதைக் கடந்தவர்கள் ஆண்டுக்கு இரண்டு தடவைகள் மருத்துவப் பரிசோதனை செய்வது அவசியம். பொதுமக்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அல்லது சுகாதார நிலையங்களில் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு தமக்குரிய தனிப்பட்ட மருந்துவப் புத்தகத்தைப் பேணவேண்டும்.

அலுவலகங்களில் புகைத்தல் தடைசெய்யப்பட்ட பிரதேசம் எனக் காட்சிப்படுத்தப்பட்ட பலகை இருத்தல் வேண்டும் என்பதுடன் அலுவலகங்களுக்கு வருபவர்கள் வெற்றிலையுடன் வருவதையும் அனுமதிக்கக்கூடாது. கடந்த ஆண்டில் விசர்நாய்க் கடியால் ஓர் இறப்பு ஏற்பட்டது. பொதுமக்களுக்கு இது தொடர்பிலான விழிப்புணர்வும் அவசியம்.

பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் காட்டும் அக்கறையைப் பிள்ளைகளின் சுகாதாரத்திலும் செலுத்த வேண்டும் - என்றார்.

கூட்டத்தில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வி. பி. எஸ். டி. பத்திரன, பிரதேச செயலாளர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சிரேஷ்ட பொதுச் சுகாதாரப்பரிசோதகர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-இ)

# டெங்கு விழிப்புணர்வு 14ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.9

யாழ்.மாவட்டத்தில் டெங்கு விழிப்புணர்வு வாரத்தை இந்தமாதம் 14 ஆம் திகதி தொடக்கம் முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் தலைமையில் இடம்பெற்றபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வணக்கஸ்தலங்களிலும், 15 ஆம் திகதி அரசாங்க அலுவலகங்களிலும், 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் பாடசாலைகளிலும் சம்பந்தப்பட்ட சுகாதாரம் மருத்துவ அதிகாரி ஒருங்கிணைப்பில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதேவேளை விசேட நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இம் மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# திஸ்ஸ விகாரைக்கு எதிராக தொடர்கின்றது போராட்டம்

யாழ்ப்பாணம், செப்.9

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு வலியுறுத்தியும், விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களிடம் மீள வழங்கக்கோரியும் நேற்றுமுன்தினமும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாதந்தோறும் போயா தினத்தில் இந்தப் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், நேற்றுமுன்தினம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள், தமிழ்த்தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், பருத்தித்துறை நகரசபையின் தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ் போல், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், உள்ளூராட்சிசபைகளின் உறுப்பினர்கள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (எ-41-66)






# இயன் மருத்துவ தினத்தில் மானிப்பாயில் நடைபவனி

யாழ்ப்பாணம், செப்.9

உலக இயன் மருத்துவத் தினத்தை முன்னிட்டு நேற்று மானிப்பாயில் நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

மானிப்பாய் கிறீன் மருத்துவமனையின் ஏற்பாட்டில் இந்த நடைபவனி இடம்பெற்றது. நடைபவனியில் கிறீன் மருத்துவமனை நிர்வாகத்தினர், மருத்துவர்கள், மருத்துவமனை ஊழியர்கள், மானிப்பாய் பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27)

# அபிஷேக ஆராதனை

யாழ்ப்பாணம், செப்.9

அச்செழு வடக்கு அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த விஷேட அபிஷேக ஆராதனை நிகழ்வு பூரட்டாதி நட்சத்திரமும் பிரதம திதியும் கூடிய சுபதினத்தில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது.

அம்பாளுக்கு விஷேட அபிஷேகம், பூஜை ஆராதனை என்பன தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று 10ஆம் நாளான எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை 108 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. விஷேட உற்சவகாலப் பிரதமகுருவாக சிவஶ்ரீ. சோமதேவகுருக்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (எ-41)

# புனித ஸ்நாபகர் அருளப்பர் மன்ற 55 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்



மன்னார்,செப்.9

பேசாலை 'புனித ஸ்நாபகர் அருளப்பர்' மன்றத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பேசாலையில் இறைவழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றது. புனித வெற்றி அன்னையின் ஆலய முன்றலில் மன்ற உறுப்பினர்கள் புடைசூழ பங்குத்தந்தை அருட்பணி எஸ்.சத்தியராஜ் அடிகளார் மன்றக் கொடியை ஏற்றினார். தொடர்ந்து மன்ற உறுப்பினர்களின் பங்களிப்புடன் நன்றித் திருப்பலி இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்டத்தில் பேசாலைப் பங்கில் பங்குத்தந்தையாக இருந்த அமலமரித் தியாகி சபையைச் சேர்ந்த அருட்பணி லூயிஸ் பொன்னையா அடிகளார் இங்கு பங்குதந்தையாக இருந்தபொழுது இளம் சமூகத்தை ஒன்றிணைத்து 'புனித ஸ்நாபகர் அருளப்பர்' மன்றத்தை உருவாக்கியிருந்தார். (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டு நிகழ்வு

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத் தலைவரும், சூழலியலாளருமான பொன்னுத்துரை ஐங்கரநேசன் கலை, இலக்கியப் பேராளுமைகளுடன் நிகழ்த்திய நேர்காணல்களின் தொகுப்பான வேர் முகங்கள் நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத் துறைத் தலைவர் கலாநிதி தி.செல்வமனோகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-66)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25
11
1945



மறைவு
24
08
2021

**அமரர் வல்லிபுரம் கந்தசாமி**


திதி-ஆவணி அமரபக்க துதியை

நானிலம் விட்டேகி நாலாண்டானதுவோ
நாம் இங்கு கலங்கி வெதும்புகின்றோம்
உங்கள்முகம் காணாது
அன்பாய் அரவணைத்து அறிவுரைகள் பல கூறி
விகடமாய்ப் பேசி எமை எல்லாம் மகிழ்வித்து
எங்குதான் சென்றீர்களோ
நாலாண்டு என்ன நாற்பது ஆண்டுகள் சென்றாலும்
என்றும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

வைகை,
வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.

தங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம்
19
10
1963

மறைவு
05
09
2025

**சிவசாமி தனபாலசுந்தரம்**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசாமி தனபாலசுந்தரம் அவர்கள் கடந்த (05.09.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசாமி - கமலேஸ்வரி தம்பதியரின் மகனும், மனிகயே (Italy) அவர்களின் அன்புக் கணவரும், சுதர்சன் (Italy), ஸ்திவன் (italy) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், டெபோராவின் (Italy) பாசமிகு பேரனும், சுந்தரேஸ்வரி, கோகிலேஸ்வரி, தேவபாலன், சத்தியபாலன் காலஞ்சென்ற நகுலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-09-2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 259 5560
077 372 1260

19/1, அரசடி ஒழுங்கை,
தட்டாதெரு, யாழ்ப்பாணம். (CS/3974) J-1

# லான்சாவுக்கு பிணை

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 10.06.1950
மறைவு 08.09.2025

**வேலுப்பிள்ளை யோகேஸ்வரன்**
(சிற்பாச்சாரியார் அராலி மத்தி)

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தற்போது நடைபெற்றுவரும் இராஜகோபுரத்தின் ஸ்தபதியாக இருந்து செயற்பட்டுவரும்

**வேலுப்பிள்ளை யோகேஸ்வரன்**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


(CS 3977) A

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம்
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

ஆலய பரிபாலன சபை
இராஜகோபுர
திருப்பணிச்சபை.

## மரண அறிவித்தல்

### நாகேசு சாந்தலிங்கம் (தம்பு)



தோற்றம் 23.07.1942
மறைவு 08.09.2025

வேலணை மேற்கு 06, சிற்பனையை பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு 08ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேசு சாந்தலிங்கம் அவர்கள் நேற்று (08.09.2025) திங்கட்கிழமை அன்று காலமானார். இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
04
07
1950



மறைவு
07
09
2025

**அமரர் செபஸ்தி அல்ஸ்ரன்**
(ஓய்வு பெற்ற அலுவலகப் பணியாளர் பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)

நாரந்தனையை பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தி அல்ஸ்ரன் அவர்கள் கடந்த (07. 09. 2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தி-றோசமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சின்னக்கிளி அவர்களின் பாசமிகு கணவரும் ஆன்சிந்துஷா, ஆன்அனோபியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்ரன் விஜீவராஜ், நித்தியராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும், அவனிதன், அவந்திக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான மேரியோசே, மரிஸ்ரெலா, வில்லியம் ஆகியோரின் இளைய சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க வழிபாடு நாளை (10.09.2025) புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 873 3879

கொழும்பு, செப்.9

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவுக்கு நீர்கொழும்பு மேல் நீதி மன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது.

நபர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் அண்மையில் கைதுசெய்யப்பட்ட நிமல் லான்சா விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நிமல் லான்சாவை தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. அதே நேரம் அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## எம்மவர் முற்றத்தின் ஆய்வரங்கு

யாழ்., செப்.9

மரபான சிந்தனைகளை அறிந்து அதிலிருந்து மாற்றான சிந்தனைகளைத் தேடும் அரங்கான எம்மவர் முற்றத்தின் செப்ரெம்பர் மாதத்துக்கான ஆய்வரங்கு கடந்த சனிக்கிழமை அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவ சித்தாந்தத் துறைத்தலைவர் கலாநிதி திருச்செல்வம் செல்வமனோகரன் கலந்து கொண்டு 'இலங்கையில் சிறுதெய்வ வழிபாடும் அதுதொடர்பான ஆய்வுகளும்' எனும் தலைப்பில் அரங்கவுரை ஆற்றினார். தொடர்ந்து கருத்துப்பகிர்வும், கலந்துரையாடலும் நடைபெற்றன. (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலை விவகாரம் சர்வதேசத்தின் நீதியே தேவை

## தவிசாளர் நிரோஷ் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், செப்.9**

**தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாதம் மற்றும் இனப்படுகொலை விவகாரத்தில், உள்நாட்டு விசாரணைகளோ அல்லது பொறிமுறைகளோ தீர் வைத்தராது. சர்வதேசத்தின் நீதியே எமக்குத் தேவை என்று வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.**

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலையின் 29 ஆவது நினைவு தினம் செம்மணியில் நேற்று முன்தினம் அனுஸ்டிக்கப்பட்டது. நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரித்துள்ளதாவது:-

எமது மண்ணில் வகை தொகையின்றி இலட்சக்கணக்கானவர்கள் அரச படைகளால் கொன்றழிக்கப்பட்டுள்ளனர். கிருஷாந்தி குமாரசுவாமி உள்ளிட்ட நுற்றுக்கணக்கானவர்கள் முழுமையான அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் கொன்றழிக்கப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறாக புதைக்கப்பட்டவர்களின் ஆன்மாக்கள் நீதிகோரி மீண்டெழுந்து நிற்கின்றன. இப்போது கூட நூற்றுக்க ணக்கான எலும்புக் கூடுகள் மீட்கப்படுகின்றன.

இலங்கை அரசோ அல்லது அரசாங்கமோ மேற்கொள்ளும் விசாரணை சர்வதேசத்தை ஏமாற்றி, நீதி விசாரணைகளைக் காலதாமதத்துக்கு உட்படுத்தி சாட்சியங்களை வலுவற்றதாக்கும். தற்போதும் ஜெனிவாவில் அதற்கான நகர்வு ஒன்றையே அரசாங்கம் மேற்கொள்கின்றது.

நாம் எமது இனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி ஒன்றே தீர்வு என்பதில் உறுதியாகச் செயற்பட வேண்டிய பொறுப்புடையவர்கள்- என்றார். (ஏ-இ)





## பண்பாட்டுப் பெருவிழாவும் சாதனையாளர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், செப்.9

எழுதுமட்டுவாழ் பொன்னம்மா உதவும் கரங்கள் அமைப்பின் கலாசாரப் பண்பாட்டுப் பெருவிழாவும் சாதனையாளர் கௌரவிப்பும் நூல் வெளியீடும் நேற்றுமுன்தினம் எழுதுமட்டுவாழ் வடக்கு மருதங்குளம் விநாயகர் ஆலயத்தில் பணிப்பாளர் க.கங்காதரன் தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் சி.சத்தியசோதி, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஸ்ட விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, தென்மராட்சிக் கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரியரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-159)

# ஆண்டுதோறும் விரயமாகும் பெருந்தொகை காய்கறிகள்

கொழும்பு, செப்.9

நாட்டில் ஆண்டுதோறும் அறுவடை மற்றும் விற்பனைகளுக்குப் பின்னர் சுமார் 180 பில்லியன் ரூபா பெறுமதியான பழங்களும் காய்கறிகளும் வீண்விரயம் செய்யப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீண்விரயம் செய்யப்படும் பழங்கள் மற்றும் காய்கறிகள் நாட்டில் வாழும் மக்களுக்கு இரண்டு முதல் நான்கு மாதங்களுக்கு உணவளிக்கப்போதுமானவை என்றும் கூறப்படுகின்றது.

போக்குவரத்தில் மட்டும் ஆண்டுதோறும் 5 இலட்சம் மெட்ரிக் தொன்களுக்கும் அதிகமான பழங்கள் மற்றும் காய்கறிகள் வீண் விரயமாகின்றன. அறுவடைகளின் போது சுமார் 30 சதவீதம் தொடக்கம் 40 சதவீதம் வரையிலான பழங்கள் மற்றும் காய்கறிகள் வீண்விரயமாகின்றன. இதனால் விவசாயிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் பெரியளவிலான விளைவுகளை சந்திக்கின்றனர்.

விவசாயிகள், இடைத்தரகர்கள் மற்றும் சில்லறை விற்பனை யாளர்கள் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் நடவடிக்கைகளைப் பின்பற்றத் தவறுவதாலேயே இந்த வீண்விரயம் ஏற்படுகின்றது. (ஏ-இ)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 . 02 . 1948 | 06 . 09 . 2025 |



**அமரர் தர்மலிங்கம் தேவரத்தினம்**

சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தேவரத்தினம் அவர்கள் கடந்த (06.09.2025) சனிக்கிழமை அன்று இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-சின்னம்மா ( மேசன் கோபாலு) தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் இளைய மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கம் ( கட்டிட ஒப்பந்தகாரர்) அவர்களின் அன்பு மனைவியும், முருகதாஸ், குமாரதாஸ், குணவிஜயா, ஜெயசூரியா, பவானி, குகதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், நிர்மலரூபி, அற்புதமலர், சுரேந்திரன், மங்களகுமார், நவரூபன் ஆகியோரின் மாமியாரும், சாளினி, சாருஜன், திலஷ்சனா, தனுஷ், ஹவிவர்ணா, பரிவர்த்தனா, தனுவர்ஜன், மிதுர்சாளினி, டினுர்சாளினி ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற தியாகராஜா, மற்றும் பரமராஜா, சந்திராதேவி, காலஞ்சென்ற கந்தசாமி, மற்றும் குணராஜா, இந்திரேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், பத்மாதேவி, காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் கணபதிப்பிள்ளை, பாக்கியதேவி, பாலகிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனரும், சுபதர்சனா, திரேகா, திலக்ஷன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (10.09.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக பி.ப 1.30 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**"தாஸ்மகால்"**
**பொற்தொழிலாளர் வீதி,**
**சங்கத்தானை,**
**சாவகச்சேரி,**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 609 5952**
**0049 152 17144669**

## பழையமாணவர் சங்கத்தின் ஒன்றுகூடல், விளையாட்டு

வவுனியா,செப்.9

வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஒன்றுகூடல் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் லயன்ஸ் விளையாட்டுக் கழகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

பாடசாலையின் அதிபர் கி.நந்தபாலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், முதற்கட்டமாக பழையமாணவர்களுக்கிடையிலான துடுப்பாட்ட சுற்றுப் போட்டி இடம்பெற்றது. அதில் 2006 ஆம் ஆண்டு மாணவர்கள் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் 2005 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தர மாணவிகள் வெற்றியைத்தமதாக்கியிருந்தனர். வெற்றிபெற்றவர்களுக்கான வெற்றிக்கிண்ணங்கள் விருந்தினர்களால் வழங்கப்பட்டன. (ஏ-110)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேபாளத்தில் வெடித்தது கலவரம்

நேபாளத்தில் சமூக வலைத்தளங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கத்தின் முடிவுக்கு எதிராக அங்கு ஆரம்பமான போராட்டங்கள் கலவரங்களாக மாற்றம் பெற்றுள்ளன.
(ம)


## பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. உணவு தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**நிர்வாகி**

**077 810 6857, 075 974 2495, 021 226 5551**

www.valvaieldershome.com

(CS 59350) E



## TENDER NOTICE EXTENDED

Sealed tenders are invited by Uduvil Girls' College for the *Renovation of Mission House roofing and renovation of Hostel kitchen.*

Tender documents may be collected from the School Office till Friday, 12th September between 8am and 2.30pm on payment of a non-refundable fee of Rs.1,000.

Only tenders from registered contractors will be accepted. Completed tenders must be submitted on or before 19th September, 2.30 p.m. Tenders will be opened on 25th September at 2.00 p.m. at the College.

The College reserves the right to accept or reject any or all tenders.

**Principal**
**Uduvil Girls' College**


## மாற்றுத்திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்க வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

மாற்றுத்திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 26.04.2025 அன்று நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளூராட்சி தேர்தல் காரணமாக பிற்போடப்பட்டது.

இவ் வருடாந்த பொதுக்கூட்டம் 21.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு வைத்திய கலாநிதி ந.சிவராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் தலைவர் வைத்திய கலாநிதி சு.சிவபாதமூர்த்தி அவர்களின் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

- மங்கல விளக்கேற்றல்
- மௌன இறைவணக்கம்
- தலைமையுரை
- 16 வது பொதுக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
- 01.06.2025 தொடக்கம் 20.09.2025 வரையான செயற்பாட்டறிக்கை சமர்ப்பித்தல்
- ஏனைய விடயங்கள்
- புதிய நிர்வாகசபை உறுப்பினர்களை தெரிவு செய்தல்
- நன்றியுரை

47/1 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு
யாழ்ப்பாணம், இலங்கை

திருமதி. சுஜீவா சிவதாஸ்
செயலாளர்

(CS 59345) E

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 01 . 1952 — மறைவு 08 . 09 . 2025

உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும் கொண்ட

### திருமதி கனகாம்பிகை தவராஜா

அவர்கள் 08.09.2025 திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற நடராஜா தவராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னுத்துரை - கனகமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், ஜெனோதினி, நிலோஜினி, மயூரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிரிதரன், அகிலன், சிவானியின் அன்பு மாமியாரும், கிரேஸ், ஆயுஷன், அனிஷன், கௌசல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற தில்லை நடேசன், பாலாம்பிகை, ஞானாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 10.09.2025 புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் உரும்பிராய் இளங்காட்டு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய்

தகவல் :
குடும்பத்தினர்

(CS 59351) E

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 02 . 1943 — மறைவு 04 . 09 . 2025

### துரைமணி சிவராசா

யாழ். கந்தர்மடம் ஆத்திசூடி வீதியைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட துரைமணி சிவராசா அவர்கள் 04.09.2025 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - லக்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவராசா அவர்களின் அன்பு மனைவியும், சுதா (நெதர்லாந்து), விஜயகுமார் (கனடா), வனிதா (கனடா), விஜயரட்ணம் (ராஜன்- கனடா), யாமினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், நாகராசா, பரமநாதன், கமலநாதன் மற்றும் யோகநாதன் (கனடா), லீலாவதி (டென்மார்க்), மனோகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உதயகுமார் (நெதர்லாந்து), சிறீதரன் (கனடா), பிரியா (கனடா), ரவிசாந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கீர்த்தனா, சபானா, லரீனா, லக்சன், ருபிசன், தீபிகன் அபிசனா, ஆரத்யன் ஆகியோரின் அன்புச் பேத்தியும், உதி, ஜோதி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 09.09.2025 (செவ்வாய்க்கிழமை) 10.09.2025 (புதன்கிழமை) ஆகிய தினங்களில் Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada இல் பார்வைக்கு வைக்கப்பட்டு 10.09.2025 (புதன்கிழமை) பிற்பகல் 01.00 மணியளவில் North Toronto Crematorium 2 Stalwart Industrial Dr, Gormeley, ON LOH 1GO, Canada இல் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு**
விஜயகுமார் (மகன்): +16474074014
வனிதா (மகள்): +16472305344
விஜயரெட்ணம் (ராஜன் - மகன்): +16472846123
யாமினி (மகள்): +14379953721

தகவல்:
குடும்பத்தினர்

(CS 59346) E

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தென்மராட்சிப் பிரதேச செயலக அலுவலர்கள் செயிரி வாரத்தையொட்டி பிரதேச வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். (ச-25,9)



வலிகாமம் மேற்கு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்துக்கு இரண்டு மின் விசிறிகள் அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டுள்ளன. வலி. மேற்கின் பிரதேசசபை உறுப்பினர் ஜெயகாந்தன் துவாரகா வினால் வழங்கப்படுகின்ற மாதாந்த சபைக் கொடுப்பனவில் இந்த இரண்டு 2 மின்விசிறிகளும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25,27)




வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப்பேரவையின் ஏற்பாட்டில் பெருவிழாவின் 12ஆம் நாளான கடந்த புதன்கிழமை உளவளத் துணையாளர் நா.நவராஜ் "திருமுருகாற்றுப்படை" எனும் தலைப்பில் ஆன்மிக உரை நிகழ்த்தினார். (ச-25,66)



# இலவச சித்த வைத்திய முகாம்

மன்னார், செப்.9

பேசாலை கிராமிய சித்த வைத்திய சாலையின் ஏற்பாட்டில், வட மாகாண சுதேச வைத்தியத் திணைக்களம்,யாழ். பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவபீடம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இலவச சித்த வைத்திய முகாம் மன்னார் ஜோசப்வாஸ் நகர் கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. இதன்போது வைத்திய ஆலோசனைகள்,உளநல ஆலோசனைகள்,ஆரம்ப ஆய்வுகூடப் பரிசோதனைகள் உள்ளிட்ட சேவைகள் முன்னெடுக்கப்பட்டதோடு இலவசமாக மருந்துகள் வழங்கப்பட்டன. (ச-25, 56)



அரசாங்க நிறுவனங்களில் ஒழுங்கமைப்பைப் பேணுவதற்காக "செயிரி வாரம் செயற்படுத்துதல்" வேலைத் திட்டத்தின் கீழ் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் சிரமதான நிகழ்வு இடம்பெற்றது. (ச-25,9)



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 159ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தில் சிறப்புப் பூஜை வழிபாடுகள் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன. முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் பிரதேசத்துக்கு உட்பட்ட பொலிஸ் நிலையத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பிரதான பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் இதில் கலந்துகொண்டனர்.. (ச-25,19)





# தகவல் அறியும் உரிமைகள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கிளிநொச்சி, செப்.9

தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு, கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களின் உள்ளூராட்சிமன்றங்களின் தவிசாளர்கள், உபதவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள் பங்கேற்றனர். கருத்தரங்கில், உள்ளூராட்சி மன்ற அலுவலகங்களில் தகவல் உரிமையை அணுகுவதற்குக் காணப்படும் ஏற்பாடுகள், தகவல் அறியும் உரிமைச் சட்ட அறிமுகம், தகவல் கோருதல் ஆகியன தொடர்பான நடைமுறைகள் மற்றும் சவால்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. (ச-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், ஆணையாளர் வோல்கர் ட்ரக்கின் வாய்மொழி அறிக்கைக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்ததாவது:-

2024ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தலிலும், அதைத் தொடர்ந்து நவம்பர் மாதம் நாடாளுமன்றத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு மக்கள் அமோக ஆதரவை வழங்கினார்கள். வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள மக்கள் ஒரு கட்சிக்கு இவ்வளவு ஆதரவு வழங்கியது இலங்கையின் வரலாற்றில் இதுவே முதல்முறை.

பல்வேறு சமூகத்தினரையும், சாதனை படைத்த எண்ணிக்கையிலான பெண்களையும் உள்ளடக்கிய, இலங்கையின் வரலாற்றிலேயே மிகச் சிறந்த நாடாளுமன்றம் இது. முதன்முறையாக, மலையக சமூகத்தைச் சேர்ந்த இரண்டு பெண் உறுப்பினர்களும், ஒரு கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளியும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பல ஆண்டுகளாக ஒத்திவைக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. எந்தவித வன்முறைச் சம்பவங்களும், அரச வளங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்ட நிகழ்வுகளும் இல்லாமல் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெற்றன. இவ்வாறாக இலங்கை தற்போது சுமுகமாக நகர்ந்து கொண்டிருக்கின்றது.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் போன்ற உள்நாட்டு நல்லிணக்கப் பொறிமுறைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை விரைவுபடுத்த தொடர்புடைய அலுவலகத்துக்கு மேலதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. செம்மணிப் புதைகுழி உட்பட பல்வேறு புதைகுழிகள் குறித்து சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. பொலிஸ் துறையின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டு, ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் போன்ற பல நீண்டகால வழக்குகள் மீண்டும் விசாரிக்கப்படுகின்றன.

மோதல்களில் உயிரிழந்தோரை நினைவுகூரும் உரிமைக்கு அரசு அனுமதி அளித்துள்ளது, இதனால் இந்த ஆண்டு பல இடங்களில் நினைவு நிகழ்வுகள் சுதந்திரமாக நடத்தப்பட்டன. சிவில் சமூக அமைப்புகளுக்கு சுதந்திரமாக செயற்பட ஏற்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான தனியார் காணிகள் உரிமையாளர்களிடம் விடுவிக்கப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்பிற்கு அத்தியாவசியமான காணிகள் மட்டுமே கையகப்படுத்தப்படும். அவற்றுக்கு உரிய இழப்பீடுகள் வழங்கப்படும்.

**ஊழல் ஒழிப்பு மற்றும் சீர்திருத்தங்கள்**

கடந்த சில மாதங்களில், ஊழல் ஒழிப்புக்கு வலுவான புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. சமூக நிலை எதுவாக இருந்தாலும், அரசியற் தலையீடு இல்லாமல், குற்றச்சாட்டுகள் குறித்த சுதந்திரமான விசாரணைகள் மற்றும் வழக்குகள் தொடரப்பட்டு பல முக்கியமான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், புதிய அரசியல் கலாசாரம் மற்றும் நல்லாட்சியை ஊக்குவிக்கும் நோக்கில் 'தூய இலங்கை' என்ற நிகழ்ச்சித்திட்டம் ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்டது. ஊழலற்ற இலங்கை ஒவ்வொரு குடிமகனின் கண்ணியத்துக்கும், நலனுக்கும் இன்றியமையாதது என அரசாங்கம் உறுதியாக நம்புகிறது.

அத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உறுப்பினர்கள், பார்வையாளர்கள் மற்றும் அனைத்து பங்குதாரர்களும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படவேண்டும் என்றும், அதன் முயற்சிகளைப் புரிந்து கொண்டு ஆதரவு வழங்கவேண்டும் என்றும் இலங்கை கேட்டுக்கொள்கின்றது.

இலங்கையின் இறையாண்மைக்கு முக்கியத்துவம் அளிப்பதையும், வெளிநாட்டுத் தலையீடுகளை நிராகரிப்பதையும், உள்நாட்டுப் பொறிமுறைகள்மூலம் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை அடைய முடியும் என்பதையும் இலங்கை நம்புகின்றது - என்றார். (அ-ம)

## புதிய...

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்குப் பதிலாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்குவதில் அரசாங்கம் உறுதியுடன் உள்ளது. இதற்காக நியமிக்கப்பட்ட குழு பணிகளை முன்னெடுத்து வருகின்றது. புதிய சட்டவரைவு இம்மாதம் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று அமைச்சர் விஜித ஹேரத் மேலும் குறிப்பிட்டார். (அ-ம)

## செம்மணிப்...

ஆரம்பமானது. இதன்போது, இலங்கை தொடர்பில் தனது வாய்மொழி அறிக்கையை முன்வைக்கும்போதே, செம்மணிப் புதைகுழிக்கும் சர்வதேச விசாரணை அவசியம் என்று ஆணையாளர் வோல்கர் ட்ரக் வலியுறுத்தினார். செம்மணிப் புதைகுழி குறித்த அறிக்கையிடலை ஆணையாளர் செய்தபோது செம்மணி என்ற பதத்தை சரியாக உச்சரிப்பதில் அவர் ஆரம்பத்தில் சிரமப்பட்டிருந்ததை அவதானிக்கமுடிந்தது. (அ-ம)

## உடைமையில்...

சந்தேகத்துக்கு இடமான வகையில் பயணித்த எரிபொருள் தாங்கியை இடைமறித்துச் சோதனையிட்டுள்ளனர். இதன்போது, சாரதியின் உடைமையில் கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், சாரதியை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, அவர் போதைப்பொருள்களைப் பயன்படுத்தியமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து, தொடர்புடைய எரிபொருள் தாங்கி பொலிஸாரின் கட்டுப்பாட்டில் எடுக்கப்பட்டதுடன், தொடர்புடைய சாரதிக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-28-26)

## வடக்கு...

முன்பாகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 'கொழும்பு, ஹம்பகா, காலி, களுத்துறை என பல வெளி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 40 பேர் எட்டு வருடகால கடமைச்சேவையின் அடிப்படையில் சிங்கள மொழியைக் கற்பிக்க வடக்கில் நியமனம் பெற்றோம். ஆனால், 12 வருடங்களாகியும் சொந்த மாவட்டங்களுக்கு நாம் மாற்றப்படவில்லை. இது பாரபட்சமானது' என்று போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

அவர்களின் கோரிக்கையைக் கேட்டறிந்த வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், எதிர்வரும் ஜனவரிக்குள் இந்தப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் என்று தெரிவித்தார். (அ-ம-27)

## சடலத்தை...

சடலத்தை அடையாளம் காண்பதற்கு உதவுமாறு தலைமன்னார் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தலைமன்னார் காட்டுப்பகுதியில் கடந்த மாதம் 19ஆம் திகதி எரிந்த நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டு, மன்னார் மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இதுவரை அந்தச் சடலத்தை அடையாளம் காண்பதற்கு எவரும் முன்வரவில்லை. இதையடுத்தே, அந்தச் சடலத்தை அடையாளம் காண்பதற்கு முன்வருமாறும் அடையாளம்காண உதவுமாறும் தலைமன்னார் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-60-56)

## தவறான...

இளவாலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டத்தரிப்புப் பகுதியில் 72 வயது மூதாட்டியொருவர் தவறான முடிவெடுத்து நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

மூதாட்டி மயக்கமடைந்த நிலையில் இருப்பதைப் பார்த்த உறவினர்கள் அவரை மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டுசென்ற நிலையில், அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## கூரை...

குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சிவநாயகம் சுரேஷ் (வயது-43) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நவாலி வடக்குப் பகுதியில் உள்ள தனது சகோதரனின் வீட்டுக் கூரையைத் திருத்தும் பணிகளில் கடந்த மூன்றாம் திகதி ஈடுபட்டபோது அவர் தவறி வீழ்ந்துள்ளார்.

இதையடுத்து, அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்று மாலை உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## யாழில்...

மாவட்ட பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் மருத்துவகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 937 பேருக்கு டெங்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை. டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைக்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடந்த 4ஆம் திகதி டெங்குக் கட்டுப்பாட்டுக் கூட்டம் நடைபெற்றது. இதன் அடுத்த கட்டமாகப் பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச டெங்குக் கட்டுப்பாட்டு குழுக் கூட்டங்களும், கிராமசேவையாளர் தலைமையில் கிராமமட்ட டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்களும் 8ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி சகல வணக்கத் தலங்களிலும், 15ஆம் திகதி சகல அரச நிறுவனங்களிலும், 16ஆம், 17ஆம் திகதிகளில் சகல பாடசாலைகளிலும் டெங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையிலான மூன்று தினங்களும் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுத் தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் சகல வீடுகளிலும், வேலைத்தளங்களிலும், கல்வி நிறுவனங்களிலும், வர்த்தக நிலையங்களிலும், பொது இடங்களிலும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிக்கும் சிரமதானப் பணி ஏற்பாடு செய்யப்படவேண்டும். இதன்போது சுகாதார மருத்துவ அதிகாரிகளின் ஏற்பாட்டில் மேற்பார்வைக் குழுக்கள் வீடுகளையும், வேலைத் தளங்களையும், கல்வி நிறுவனங்களையும், வர்த்தக நிலையங்களையும் பார்வையிடவுள்ளனர். எனவே, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரிடமும் கோரிக்கை விடுக்கின்றோம் - என்றார். (அ-ம-66)

## சர்வதேசப்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வு, இலங்கை நேரப்படி நேற்று நண்பகல் ஆரம்பமானது. அமர்வின் முதலாவது நாளில், இலங்கையின் விவகாரம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் தனது வாய்மொழி அறிக்கையை முன்வைத்தார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பிலும், மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் காத்திரமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, சர்வதேசப் பொறிமுறை மூலமே இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். உள்நாட்டுப் பொறிமுறை தோல்வியடைந்த காரணத்தால்தான், சர்வதேசப் பொறிமுறை ஊடாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. எனவே, ஸ்ரீலங்கா அரசாங்கம் அதற்கு இணங்க வேண்டும். அத்துடன், போர்க் குற்றங்களுக்காக இலங்கையைப் பொறுப்புக்கூற வைப்பதற்கு உறுப்பு நாடுகள் பங்களிப்பை வழங்க வேண்டும் - என்றார். (அ-ம)

## யாழில்...

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அதேபோல உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மேலும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது - என்றார். (அ-ம-26-66-20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 16 ஆவது நாள் மாலைத் திருவிழாவான மௌன உற்சவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-66)

**காணி விற்பனைக்கு**

**மீசாலையில் 20 பரப்பு காணி விற்பனைக்கு**

தொடர்பு: **077 794 8012**

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள புடவையகம் ஒன்றிற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(CR/46015) J-1

**077 722 2308**

**கனரக வாகனங்களுக்கு வீதி அனுமதி பத்திரம்**

இயக்கச்சியில் இருந்து எமது மணலை யாழ் மாவட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு கனரக வாகனங்களுக்கு வீதி அனுமதிப் பத்திரம் போட்டுத்தரப்படும்.

தொடர்பு:- **076 324 9977**

# பண்பாட்டுப் பெருவிழா இன்று!

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையோடு வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணியளவில் பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் கலைஞர்களுக்கான விருதுவழங்கலும், கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலாளரும் பண்பாட்டு பேரவைத் தலைவருமான நடராசா திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அலகின் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ், யாழ்ப்பாண சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் சுகுணாலினி விஜயரத்தினம் ஆகியோரும், கௌரவவிருந்தினர்களாக மூத்தகலைஞர்களான வே. முத்துசாமி, மு. ஜெகதேவன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-41-100)

## மரண அறிவித்தல்



**திருமதி விஜயலட்சுமி குணரத்தினம்**

நல்லூரைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி குணரத்தினம் நேற்று (08.09.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், குணரத்தினத்தின் (முன்னாள் ப.நோ.கூ.சங்க முகாமையாளர்) பாசமிகு மனைவியும், லீலானந்தன் (UK), தயானந்தன் (UK), சுகிர்தா (ஆசிரியர், யா/ஸ்ரீசோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை), சிவேதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலைவாணி, சுமித்தா, வசந்தரூபன் (அதிபர், யா/பொன் - பரமானந்தர் ம.வி), பிருந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், பூஜிதா, ஜானுயா, தியா, சஸ்சியா, தனிஸ், கருணிகா, கவினுகா, அனாமிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி மேற்கில் உள்ள பத்தகலட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வயிரவர் கோவிலடி,
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

தகவல்: **குடும்பத்தினர்.**
**077 2600 402**
**077 9584 975**

(CS 3980) A

## 30ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
26 . 10 . 1942



மறைவு
11 . 09 . 1995

**அமரர் முருகேசு கனகசபை**

**(ஆசிரியர்)**

**திதி: ஆவணி அபரபக்க துதியை**

ஆண்டுகள் முப்பது ஆனதுவே !
ஆயினும் மாண்டிடுமோ உம் நினைவு !
நும் தூய அன்பும் எதற்கும்
துவண்டிடா நிமிர் நெஞ்சும்
நாம் வாழ வழி காட்டுதப்பா !
வையத்தே எமை என்றும்
வாழ்த்தி வழிகாட்டிடுங்கள்.

கைதடி,
நுணாவில்

உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

(CS/30255) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.09. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org